விலைமனுக் கோரலுக்கான அழைப்பு

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உதவி மையக் கட்டிடத்தின் தரைத்தளத்தில் சிற்றுண்டிச்சாலை சேவைகளை (இலங்கை/சீன/இந்திய உணவுகள்) வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கொள்முதல் குழுத் தலைவர், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உதவி மையக் கட்டிடத்தின் தரைத்தளத்தில் சிற்றுண்டிச்சாலை சேவையை (இலங்கை/சீன/இந்திய உணவுகள்) வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைக் கோருகிறார்.

1. சேவை வழங்குநர்கள், இலங்கையின் 1980 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக இருத்தல் வேண்டும்.

2. திரும்பப் பெற முடியாத கட்டணமாக ரூ. 1,000/-ஐ, எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும், கணக்கிலக்கம் 505170600013-ஐப் பயன்படுத்தி, பல்கலைக்கழகத்தின் பிரதான சேமிப்புக் கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்பதுடன் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு மூலம், 02.11.2026 முதல் 18.11.2026 வரை, கொழும்புப் பல்கலைக்கழகம், கொலேஜ் ஹவுஸில் உள்ள மாணவர் மற்றும் பணியாளர் விவகாரங்கள் கிளையின் முதுநிலை உதவிப் பதிவாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களைக் கட்டணமின்றிப் பார்வையிட்டு பெற்றுக்கொள்ள முடியும்.

3. விலைமனு விண்ணப்பத்தின் அசல் மற்றும் நகல் ஆகியவற்றைத் தனித்தனி உறைகளில் வைத்து, அவற்றின் மீது முறையே "ORIGINAL" (அசல்) மற்றும் "DUPLICATE" (நகல்) என்று குறிப்பிடல் வேண்டும். இவ் இரண்டு உறைகளையும் ஒரே உறையினுள் வைத்து, அவ் உறையின் இடது பக்க மூலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பு எண்ணை குறிப்பிடுதல் வேண்டும்.

வரிசை எண்	குறிப்பு எண்	சேவை	திரும்பப் பெற முடியாத வைப்புத்தொகை (ரூ.)	திரும்பப் பெறக்கூடிய வைப்புத்தொகை (ரூ.)
01	SSA/HZB/CAN/2027	சிற்றுண்டிச்சாலை (இலங்கை / சீன / இந்திய உணவுகள்)	3000/-	20,000/-

4. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை, இரு பிரதிகளாக, முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து, "முதுநிலை உதவிப் பதிவாளர், மாணவர் மற்றும் பணியாளர் விவகாரக் கிளை, கொலேஜ் ஹவுஸ், கொழும்புப் பல்கலைக்கழகம், இல.94, குமரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு 03" எனும் முகவரிக்கு, பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது வழங்கல்கள் பிரிவில் உள்ள ஏலப் பெட்டியில் இட வேண்டும். இவை 19.11.2026ஆம் திகதியன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. ரூ. 20,000/- மதிப்பிலான மீளப்பெறக்கூடிய வைப்புத்தொகையை ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் 505170700003 என்ற கணக்கிலக்கத்திற்குச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டை விலைமனு ஆவணத்துடன் இணைப்பது கட்டாயமாகும்.

6. இவ் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தவறினால், உங்கள் விலைமனு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

7. ஏதேனும் கேள்விகள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின், அவற்றை ளயச;ளளய.உஅடி.யஉ.டம என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது 011-2582336 என்ற தொலைபேசி எண்ணின் ஊடாகத் தொடர்புகொள்ளலாம்.

8. ஏலத்திற்கு முந்தைய கூட்டம் 13.11.2026 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கொலேஜ் ஹவுஸில் உள்ள குழு அறையில் நடைபெறும். அன்றைய தினம், அக்கூட்டத்திற்குப் பிறகு, குறித்த இடத்தைப் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும்.

9. சமர்ப்பிக்கப்படும் ஏலமானது 18.02.2027 வரை (ஏலம் முடிவடையும் திகதியான 19.11.2026 முதல் 92 நாட்களுக்கு) அல்லது வாடிக்கையாளர் கோரும் நீட்டிக்கப்பட்ட காலம் வரை செல்லுபடியாகும்.

10. 19.11.2026ஆம் திகதியன்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 'கொலேஜ் ஹவுஸ்" விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி முடிந்தவுடன், நேரில் வருகை தரும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். காலதாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
ஆலோசகர் கொள்முதல் குழுத் துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்,
இல. 94, குமரதுங்க முனிதாச மாவத்தை,
கொழும்பு 03.